செய்தி வெளியீடு எண் :61 நாள்:-30.08.2019

**தேனி மாவட்டம்**

**மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சரின் சிறப்பு குறை தீர்வு திட்ட முகாமின் மூலம் மாவட்டத்தில் உள்ள 5 வட்டத்திற்குட்பட்ட பகுதிகளில் மொத்தம் 6,041 மனுக்கள் பெறப்பட்டுள்ளது - மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி ம.பல்லவி பல்தேவ், இ.ஆ.ப., அவர்கள் தகவல்:-**

*****

தேனி மாவட்டம், தேனி ஊராட்சி ஒன்றியத்திற்குட்ட கொடுவிலார்பட்டி ஊராட்சியில் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சரின் சிறப்பு குறை தீர்வு திட்ட முகாமினை மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி ம.பல்லவி பல்தேவ், இ.ஆ.ப., அவர்கள் இன்று (30.08.2019) துவக்கி வைத்து, பொதுமக்களிடம் கோரிக்கை மனுக்களை பெற்று குறைகளை கேட்டறிந்தார்.

**முகாமினை துவக்கி வைத்து, மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் தெரிவிக்கையில்,**

மக்களின் குறைகளை நிவர்த்தி செய்வதற்கு, தமிழக அரசு அதிக முன்னுரிமை அளித்து, அவர்களின் தேவைகளை உடனுக்குடன் நிவர்த்தி செய்து வருகிறது. பொதுமக்களின் தேவைகளை, கோரிக்கை மனுக்களாக அளித்து பயன்பெறும் வகையில், மக்கள் குறைதீர்க்கும் கூட்டம், அம்மா திட்ட முகாம் ஆகியவைகள் மூலம் பொதுமக்களின் தேவைகளை நிவர்த்தி செய்யப்பட்டு வருகிறது.

பொதுமக்கள் தங்களுடைய தேவைகளான முதியோர் உதவித்தொகை, பட்டா மாறுதல், வீட்டுமனைப் பட்டா, உழவர் பாதுகாப்பு அட்டை, பிறப்பு, இறப்பு சான்றிதழ், சாதிச் சான்றிதழ், இருப்பிடச் சான்றிதழ், வருமானச் சான்றிதழ், குடிநீர் வசதி, சாலை வசதி, மின்விளக்கு வசதி, குடும்ப அட்டை உள்ளிட்ட பல்வேறு கோரிக்கை மனுக்களை பொதுமக்கள், பல்வேறு பகுதிகளிலிருந்து பேருந்தின் மூலம் வட்டாட்சியர், கோட்டாட்சியர் மற்றும் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்திற்கு சென்று மனுக்களை வழங்க, ஏற்படும் நேரம், செலவு, வேலை இழப்பு உள்ளிட்ட சிரமத்தை தவிர்க்கும் பொருட்டு, வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத்துறையின் மூலம் அலுவலர்கள் பொதுமக்களின் பகுதிகளுக்கு நேரடியாக சென்று மனுக்களைப் பெற அரசால் வழிவகை செய்யப்பட்டுள்ளது.

மேலும், பொதுமக்களின் குறைகளை மனு மூலமாக பெற்று, உடன் நடவடிக்கை மேற்கொள்ளும் பொருட்டு, மக்களைத் தேடி அரசு என்ற உன்னத நிலையை ஏற்படுத்தும் வகையில் **"மாண்புமிகு தமிழக முதலமைச்சரின் சிறப்பு குறை தீர்வு திட்டத்தை"** மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் தொடங்கி வைத்துள்ளார்கள். இத்திட்டம் தமிழ்நாட்டில் உள்ள மாநகராட்சிகள், நகராட்சிகள், பேரூராட்சிகள் மற்றும் அனைத்து கிராமங்களிலும் வருகின்ற 31.08.2019க்குள் நடத்தப்பட்டு, பொதுமக்களிடமிருந்து கோரிக்கை மனுக்களை பெற்று, அம்மனுக்களின் மீது தொடர்புடைய அலுவலர்கள் உரிய நடவடிக்கை மேற்கொண்டு, விரைந்து தீர்வு காணுமாறு அறிவுறுத்தபட்டுள்ளது.

அதன்படி, ***“மாண்புமிகு தமிழக முதலமைச்சரின் சிறப்பு குறை தீர்வு திட்டம்”*** நமது தேனி மாவட்டத்தில் இன்றைய தினம் தொடங்கி வைக்கப்பட்டு, பொதுமக்களிடமிருந்து பல்வேறு கோரிக்கைகளை வலியுறுத்தி மனுக்கள் இந்நிகழ்ச்சியின் மூலம் பெறப்பட்டுள்ளது. இதனை தொடர்புடைய அலுவலர்களுக்கு வழங்கி, உடன் நடவடிக்கை மேற்கொள்ளப்படும். இதனை தொடர்ந்து, மாவட்டத்தில் உள்ள நகராட்சிகள், பேரூராட்சிகளிலுள்ள அனைத்து வார்டுகளிலும் மற்றும் அனைத்து கிராமங்களிலும் அனைத்து வட்டங்களிலும் உள்ள கிராம ஊராட்சிகள், பேரூராட்சிகள் மற்றும் நகராட்சி அலுவலங்களில் துணை வட்டாட்சியர்கள், துணை வட்டார வளர்ச்சி அலுவலர்கள், உதவி வேளாண்மை அலுவலர்கள் மற்றும் அனைத்து துறை அலுவலர்கள் குழு நேரடியாக பொதுமக்களிடம் மனுக்களை பெற்றுள்ளனர்.

அதில், தேனி வட்டத்திற்குட்பட்ட பகுதிகளில் 1,095 மனுக்களும், பெரியகுளம் வட்டத்திற்குட்பட்ட பகுதிகளில் 857 மனுக்களும், ஆண்டிபட்டி வட்டத்திற்குட்பட்ட பகுதிகளில் 1,003 மனுக்களும், உத்தமபாளையம் வட்டத்திற்குட்பட்ட பகுதிகளில் 2,452 மனுக்களும், போடிநாயக்கனூர் வட்டத்திற்குட்பட்ட பகுதிகளில் 634 மனுக்களும் என மொத்தம் மேற்கண்ட 5 வட்டத்திற்குட்பட்ட பகுதிகளில் 6,041 மனுக்கள் இன்றைய தினம் பெறப்பட்டுள்ளது. அந்தந்த பகுதிகளைச் சார்ந்த பொதுமக்கள் இன்றைய தினம் கோரிக்கை மனுக்கள் அளிக்க தவறியிருந்தால், நாளை சம்பந்தப்பட்ட பகுதிகளில் உள்ள அலுவலர்களிடம் மனுக்கள் அளிக்கலாம்.

மேலும், தாங்கள் அளிக்கப்பட்ட கோரிக்கை மனுக்கள், ஒரு மாதகாலத்திற்குள் அரசு விதிகளுக்குட்பட்டு தீர்வு செய்து, உரிய நபர்களுக்கு இத்திட்டத்தின் மூலம் உரிய பலன்கள் வழங்கப்படும். தகுதியுடைய மனுக்கள் மீது உடன் நடவடிக்கை மேற்கொள்ளப்படும். எனவே பொதுமக்கள் இதனை பயன்படுத்தி, ***“மாண்புமிகு தமிழக முதலமைச்சரின் சிறப்பு குறை தீர்வு திட்டம்”*** மூலம் பல்வேறு கோரிக்கைகள் குறித்து, மனுக்களை அளித்து பயன்பெறலாம்.

குறிப்பாக, அரசைத் தேடி மக்கள் என்ற நிலையை மாற்றி மக்களைத் தேடி அரசு என்ற சிறப்பான ஒருநிலை தற்சமயம் ஏற்படுத்தப்பட்டுள்ளது. ***“மாண்புமிகு தமிழக முதலமைச்சரின் சிறப்பு குறை தீர்வு திட்டம்”*** மூலம் அனைத்து கிராம, நகர்ப்புற பகுதிகளிலும் அடித்தட்டு மக்களின் கோரிக்கைகளை நிவர்த்தி செய்வதே இதன் நோக்கமாகும். அரசால் சிறப்பாக செயல்படுத்தப்பட்டு வரும் பல்வேறு மக்கள் நலத்திட்டங்களை பொதுமக்கள் அறிந்து கொண்டு பயன்பெற வேண்டும் என தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சியில், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமையின் திட்ட இயக்குநர் பெ.திலகவதி, பெரியகுளம் வருவாய் கோட்டாட்சியர் சி.ஜெயப்பிரித்தா மற்றும் அரசு அலுவலர்கள், ஏராளமான பொதுமக்கள் கலந்து கொண்டனர்.

***வெளியீடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், தேனி.***